

தமிழ்நாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் என்று அமைச்சர் ஐ. பெரியசாமி கன்னிவாடியில் ரெட்டியார்சத்திரம் தெற்கு மற்றும் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிளைச் சேர்ந்த 110 கிரிக்கெட் குழுவினருக்கு கிரிக் கெட் உபகரணங்கள் வழங்கும் விழாவில் பேசினார். அருகில் மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, எம்.இன்பராஜ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## எழும்பூரில் மகளிர் தின விழா!

எழும்பூர், மார்ச்.11–

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு பகுதியில் செயல்பட்டு வரும் முப்பதுக்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இணைந்து 07.03.2026 அன்று எழும்பூர், சென்னை சமுதாயப் பணி கல்லூரி கலையரங்கத்தில் நடத்திய ''மகளிர் தின விழா 2026'' மற்றும் ''மகளிர் சுயஉதவிக் குழுக்களின் 5ஆம் ஆண்டு தொடக்க விழா''வில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, ஏற்றி விழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

## திருச்சியில் இருந்து டெல்லிக்கு

# போர் முரசு கொட்டியிருக்கிறார் முதல்வர்!



திருச்சியிலிருந்து டெல்லிக்கு போர் முரசு கொட்டி இருக்கிறார் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின். லட்சக்கணக்கான தொண்டர்களுக்கு ஒரு பேராசிரியராக வகுப்பு எடுத்தார். வரலாறுகளை நினைவூட்டினார்.

தொண்டர்களுக்காகவே நான் வாழ்கிறேன் என்று உள்ளம் திறந்து உணர்வுகளை கடத்தினார்.

அ.தி.மு.க. முகமூடியோடு பா.ஜ.க. தமிழ்நாட்டில் காலூன்ற முயற்சிக்கும் இந்த தேர்தல் களத்தில் உண்மையான எதிரி டெல்லிதான் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

மக்கள் மீதும் சாதனைகள் மீதும் அவர் வைத்திருக்கும் அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கைகளின் வெளிப்பாடுகள் அவரது உரையிலும் தெரிந்தது; உடல் மொழியிலும் தெரிந்தது!

தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும் அடையாளங்களையும் பண்பாடுகளையும் சிதைக்கத் துடிப்பவர்களே தமிழ்நாட்டு மக்களின் உண்மையான எதிரிகள் என ஒரு அடையாளம் காட்டிய முதல்வர் , நீங்கள் வெற்றி பெறப்போவது இல்லை என்பதையும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

மக்களை வழிநடத்திச் செல்லும் ஒரு தளபதி அதற்கேற்ப தனது தொண்டர்களை பக்குவப்படுத்தி தயார்படுத்தும் ஆற்றலையும் சக்தியையும் தந்திருக்கிறது முதல்வரின் திருச்சி பேருரை.

இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்தில் இருந்தும் ஒரு முதலமைச்சர், இப்படி டெல்லி ஆதிக்கத்தை எதிர்த்து போர்க் குரல் எழுப்பிய வரலாறு இல்லை.

**விடுதலை இராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர்



## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் நலத்திட்டங்களால்

# தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர்!

### கன்னிவாடியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், மார்ச்.11-



தமிழ்நாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டங்களால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலகளவில் சாதனை படைத்து வருகின்றனர் என்று அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம்; ரெட்டியார்சத்திரம் தெற்கு மற்றும் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகள் மற்றும் கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில்; வசிக்கும் மாணவர்களின் நலன் கருதியும், அப்பகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் நலன் கருதி 110 கிரிக்கெட் குழுவினருக்கு அமைச்சர் இ.பெரியசாமி விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா கன்னிவாடி அறிஞர் அண்ணா சந்தை திடலில் நடைபெற்றது.

விழாவிற்கு ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் முன்னாள் பெருந்தலைவரும், தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலளார் ப.க.சிவகுருசாமி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஆகியோர் தலைமை தாங்கினார்கள். ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எம்.இன்பராஜ், கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், பேரூர் கழக செயலாளர் இளங்கோவன், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் சகிலாராஜா, துணைத்தலைவர் முருகேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ் பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் மாங்கரை திருப்பதி வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலளாரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள், மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் மத்தியில் பேசும்போது இப்பகுதியில் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் அதிகம் உள்ளனர். இந்தியாவே திரும்பிப்பார்க்கும் அளவிற்கு தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகிறார்கள். குக்கிராமத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டுத் துறையில் சாதனை படைத்து வருகிறார்கள். அதற்கு காரணம் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளும், சாதனை திட்டங்களும்தான் என்றார். விளையாட்டு வீரர்களுக்கு தமிழக அரசு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கியதன்மூலம் கிராமப்புற விளையாட்டு வீரர்களும் அரசுப் பணியில் சேரும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன் கருதி நான் அமைச்சராக இருந்த போது அண்ணா பொறியியல் கல்லூரி, இப்போது அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு இரண்டு ஒன்றியங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவந்ததுபோல் கிராமப்புற மாணவர்கள், மற்றும் விளையாட்டு வீரர்கள் நலன் கருதி, ரெட்டியார்சத்திரம் மற்றும் ஆத்தூர் ஒன்றியங்களில் மாபெரும் விளையாட்டு அரங்கம் அமைய உள்ளது. தொடர்ந்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி இந்த விளையாட்டு அரங்கம், ஒரு விளையாட்டிற்கு மட்டுமல்ல, அனைத்து வகைவிளையாட்டுகளையும் விளையாடி பயிற்சி பெறும் வகையில் அமைய உள்ளது என்றார்.

அதன் பின்னர், 110 கிரிக்கெட் குழுவினருக்கு கிரிக்கெட் போட்டிகளுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கி சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்தினார். விழாவில் அமைச்சரின் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுப்புலெட்சுமி வள்ளுவதாஸ், கோனூர் திருப்பதி, ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் கரிசல்பட்டி பால்ராஜ், அம்மாபட்டி ரவி, மாவட்ட பிரதிநிதிகள் பெருமாள், எல்லை. ராமகிருஷ்ணன், இளங்கோ, கரிசல்பட்டி அமல இளவரசு, ஜோசப், போளியம்மனூர் ராஜ்குமார், உட்பட திமுக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருளானந்து நன்றி கூறினார்.

## ஒன்றிய துணை செயலாளர் டி. அண்ணாதுரை நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடியில் - முதல்வர் பிறந்தநாள் விழா!

### சி.வெ.க. வெங்கடேசன் பங்கேற்பு!

கடலூர். மார்ச் 11-

கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் பூலாம்பாடி கிராமத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளார் பூலாம்பாடி டி.அண்ணாதுரை தலைமையில் 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று பூலாம்பாடியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச்செயலாளர்கள் நாரையூர் குணா, நல்லூர் அன்புக்குமரன் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்விருத்தாசலம் நகரக் கழக துணை செயலாளர் எஸ்.இராமு, பொன். அண்ணாதுரை, குருசரஸ்வதி, மா.தொ.து. அமைப்பாளர் ரகுநாதன் வரவேற்புரையாற்றினார்கள்.

சிறப்பு அழைப்பாளராக கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் கழுதூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி குழும தாளாளருமான சி.வெ.க வெங்கடேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் புடவைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பூலாம்பாடி கழக நிர்வாகிகள் முத்துக்கருப்பன்கொளஞ்சி கோதண்டபாணி கோபால் சையத் ரபிக், சையத் உசேன், ராக்கி, ரமேஷ், ரவி வேல்முருகன் ரவி மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் வீரா.பெரியசாமி சுதா வேல் முருகன் வீரா.சக்தி, ராஜீவ் காந்தி பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.–அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

### அமைச்சர் ஆர். காந்தி பங்கேற்பு! மாவட்டச் செயலாளர் ஏ. பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர் , மார்ச்.11-



வேலூர் தெற்கு மாவட்ட திமுகவுக்கு உட்பட்ட அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. இதுகுறித்து மாவட்ட செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. பின்வருமாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் திருப்புமுனை ஏற்படுத்தி 2026 சட்ட மன்ற தேர்தலில் வெல்வோம் 200 படைப்போம் வரலாறு என்ற சூளுரையோடு திராவிட மாடல் ஆட்சியை இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் தமிழகத்தை முதன்மை பெற்ற மாநிலமாக தனது சீரிய தலைமையின் கீழ் நல்லாட்சி புரிந்து அனைத்து துறையிலும் வளர்ச்சியை கண்டு அனைத்து தரப்பு மக்களின் தேவையை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம் என்ற உயரிய லட்சியத்தோடு கழக பணியோடு ஆட்சி பணியையும் தனது இரு கண்களாக பாவித்து தமிழ்மொழி, தமிழ்நாட்டு மக்கள், தமிழ்நாடு வளர்ச்சிக்கு தன்னலம் இல்லாமல் அயராது உழைத்து திராவிட மாடல் ஆட்சியின் மூலம் தான் ஒரு தலை சிறந்த மக்கள் முதல்வர் என மக்களால் போற்றிடும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின், 73 வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (11.03.2026-புதன்கிழமை) மாலை 05.00 மணிக்கு அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி கெங்கநல்லூர் கலைஞர் திடலில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கழக பொது செயலாளர் நீர்வளம் மற்றும் சட்ட துறை அமைச்சர் துரை முருகன் மற்றும் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளரும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் நடைபெற உள்ளது.

அணைக்கட்டு சட்ட மன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் ஆகிய எனது தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் மு.பாபு, பி.வெங்கடேசன், கோ.குமரபாண்டியன் ஆகியோர்கள் வரவேற்ப்பில் ஒன்றிய செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன், என்.கஜேந்திரன் பகுதி செயலாளர்கள் ஆர்.கே.ஐயப்பன், சி.எம்.தங்கதுரை மற்றும் பேரூர் செயலாளர்கள் தி.மு.ஜாகீர் உசேன், ஆர். பெருமாள்ராஜா, பி.அருள்நாதன் ஆகியோர்கள் முன்னிலையில் ராணிபேட்டை மாவட்ட செயலாளரும் சட்ட மன்ற உறுப்பினரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் 2500 தாய்மார்களுக்கு புடவையும், 1000 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடையும், 200 இளைஞருக்கு விளையாட்டு உபகரண தொகுப்பும், 100 பெண்களுக்கு தையல் இயந்திரமும், சலவை தொழிலாளிகளுக்கு இஸ்திரி பெட்டியும், சலூன் கடை தொழிலாளர்களுக்கு சலூன் கருவி தொகுப்பும், 100 நடைபாதை வியாபாரிகளுக்கு நான்கு சக்கர தள்ளு வண்டி ஆகிய நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி விழா சிறப்புரை ஆற்ற உள்ளார். மேலும் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகர செயலாளரும், சட்ட மன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாநில கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளரும், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினருமான அமலுவிஜயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

எனவே, வேலூர் தெற்கு மாவட்டதிற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வட்ட, வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர்கள் திரளாக பங்கேற்று விழாவினை சிறப்பித்திட வேண்டுமாய் கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும் அணைக்கட்டு சட்ட மன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அவர்கள், தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த

# 200 பேர் ஆ.இராசா.எம்.பி. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், மார்ச் 11-

பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வரவேற்பில் , கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி. முன்னிலையில், ஓ.பி.எஸ்.அணியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்தமிழ் செல்வன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி சாத்தனவாடி துரை ஆகியோர் ஏற்பாட்டில் ஜெ.பேரவை அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ஆர்.பெரியசாமி, பா.ம.க. அரும்பாவூர் முன்னாள் நகரச் செயலாளர் ரவிக்குமார் மற்றும் சாத்தனவாடி,

மேட்டுப்பாளையம், எறையூர் சர்க்கரை ஆலை ஆகிய கிராமங்களில் இருந்து 200 பேர் தங்களை தி.மு.க.வில் இன்று இணைத்துக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் சி.ராஜேந்திரன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியிலிருந்து விலகி 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க நடத்தும் “தளபதி கோப்பை இறகு பந்து சாம்பியன்ஷிப் போட்டி”யில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய கழக செயலாளர்கள் க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, பி.வி. ஆர்.சு.விசுவநாதன், எஸ்.லூயிஸ், வே.கில்பர்ட்ராஜ், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, நகர பொருளாளர் இளங்கோ, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி, தொ.மு.ச நிர்வாக பணியாளர் சங்க செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ரா.சதிஷ், இரா.அகிலன், இரா.கிருஷ்ணராஜ், சரவணகுமார், ராஜீவ்காந்தி, அருள்மொழி, சே.சூர்யா, கேபிள் சுரேஷ்பாபு, அமர்ஜி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, தஷ்ணாமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.